[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

5. 11–7–2017 அன்று இதே சட்டப் பேரவையில் நான் அறிவித்தபடி, பேரிடர்களின்போது மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள தனியாக பேரிடர் மீட்புப் படை ஒன்று உருவாக்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்த, உலகத் தரம் வாய்ந்த உபகரணங்களைக் கொள்முதல் செய்ய 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. சாதாரண மக்களும் எளிதாகக் கையாளும் வகையில், இணைய வழியாக நிலம் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் கிடைக்க வகை செய்ய "தமிழ் நிலம்" என்ற ஒரு மென்பொருள் உருவாக்கி, அனைத்து துறைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, நில ஆவணங்களைப் புதுப்பித்தல், இணைய வழியாக சொத்து தொடர்பான வில்லங்க விவரங்கள் அறிந்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

7. நவீன நில அளவை கருவிகளான பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவை கருவிகள் கொண்டு முன்னோடியாக கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முறையை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த உத்தேசித்துள்ள நிலையில், முதற்கட்டமாக 40.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் நவீன நில அளவை கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஓ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவுத் தொகை மற்றும் ஆதி திராவிடர் ஈமச் சடங்கு நிதியுதவியை உயர்த்துதல் உள்ளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும், உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் பள்ளி

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் நலனைக் கருத்தில்கொண்டு, 6 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 17 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் 48.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலை உயர்த்தப்படும்.

3. பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு, தொழில்முனைவோர், நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சுயஉதவிக் குழு பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாட்கோமூலம் செயல்படுத்தப்படும்.

4. 10 ஆண்டுகளுக்கு மேலான, 80 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 20 பழங்குடியினர் நல விடுதிகளில் கூடுதல் கழிவறைகள், குளியலறைகள், மின் சாதனங்கள் போன்ற அடிப்படை வசதிகள் தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

5. தற்போதுள்ள விலைவாசியினைக் கருத்தில்கொண்டு, ஆதி திராவிடர் குடும்பங்களில் ஏற்படும் இறப்பிற்கு ஈமச் சடங்கிற்காக வழங்கப்பட்டுவரும் நிதியுதவி 2,500 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

6. ஆதி திராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளைக் கொண்டாடும் வகையில் அனைத்து வசதிகளுடன்கூடிய 24 சமுதாயக் கூடங்கள் 14.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஔ) தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் குறித்த தமிழ் வளர்ச்சித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் எஞ்சிய 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு 10 கோடி ரூபாய் நிதி வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.